# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1636/ 10 – 2010 ජනවාරි 13 වැනි බදාදා – 2010.01.13

*1636/ 10 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

*( அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )*


# பகுதி III – காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 4/1/இஅத்/59/2007.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் இல. : எல்டீ/05/ 2007/டப்எஸ்/341.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ளஅரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவில்,கந்துபலாத கோரளையின் சிறுபிரிவில், குருகுத்தல மேற்பகுதி (117) கிராமத்தில் அமைந்த, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட 2009.12.17 ஆந் திகதிய ஆ. வ. மஹ 6057 இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "தெஹிகஹயட்ட தென்னேஹேன" என்ற காணியில் சுமார் 0.0080 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு :

**துண்டு இல. 01**

காணியின் பெயர் : தெஹிகஹயட்ட தென்னேஹேன ; உரிமை கோருபவர் : எஸ். எம். எஸ். ராசிக் அவர்கள், இல. 59, கண்டி ரோட், வெலம்பட ; விஸ்தீரணம் : 0.0080 ஹெக்டயார்.

வடக்கு : ஆ. வ. மஹ 5964 இல் துண்டு இல. 01 மற்றும் பாதை ; கிழக்கு : பாதை ; தெற்கு : பாதை மற்றும் எம். எஸ். ஏ. கரீம் அவர்கள் உரிமை கோரும் தெஹிகஹயட்ட தென்னேஹேன ; மேற்கு : ஆ. வ. மஹ 5964 இல் துண்டு இல. 01.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் வருடம் மார்ச்சு மாதம் 03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு உடுநுவர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010 ஆம் வருடம் பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் உரிமை கோரலுக்கான உறுதி மற்றும் ஆவணங்கள் பரிசீலனையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

பசன் ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
உடுநுவர.

பிரதேச செயலகம்,
உடுநுவர,
2009.12.23.

01 - 789

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.